திருவாரூர் மாவட்டம், பொதக்குடியில் நடைப்பெற்ற இப்தார் (நோன்பு துறப்பு) சமுக நல்லிணக்க ஒன்று கூடல் நிகழ்வில் மாவட்டக் கழகச் செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ., தொழில்துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, காரைக்கால் சட்டமன்ற உறுப்பினர் நாஜிம் , முன்னாள் ஒன்றியக்குழு தலைவர் சோம.செந்தமிழ் செல்வன், ஒன்றிய செயலாளர் கே.வி.கே. ஆனந்த் மற்றும் ஜமாஅத் நிர்வாகிகள், இஸ்லாமிய மக்கள் பங்கேற்றனர்.

சிறுபான்மையின மக்களுக்கு நன்குத் தெரியும்,

தி.மு.க.வை தவிர எந்த கட்சியையும் அவர்கள் நம்ப தயாராக இல்லை!

அமைச்சர் எஸ்.ரகுபதி பேட்டி!

புதுக்கோட்டை, மார்ச் - 10 -

புதுக்கோட்டை மாட்சிமை தங்கிய மன்னர் கல்லூரியில் மாவட்ட நிர்வாகம், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில் நெறி வழிகாட்டு மையம் நடத்தும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் நடைபெற்றது. இதில் எட்டாம் வகுப்பு முதல் பட்டப் படிப்பு வரை ஐடிஐ, டிப்ளமோ, நர்சிங், பார்மசி, பொறியியல் படிப்புக்கான வேலை வாய்ப்பு முகாமில் நூற்றுக்கு மேற்பட்ட முன்னணி நிறுவனங்கள் பங்கேற்றன. இந்த முகாமில் தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு பணி நியமன ஆணைகளை சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே. செல்லபாண்டியன், புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வை. முத்துராஜா, மாவட்ட ஆட்சியர் அருணா தலைமையில் பங்கேற்று வழங்கினர். இதன் பின்னர் செய்தியாளர்களை சந்தித்த

சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, போன் கால் மூலம் மெம்பர்சிப் சேர்த்ததைப் போல் தான் மும்மொழி கல்விக்கு ஆதரவாக பாஜகவினர் வாங்கும் கையெழுத்து இயக்கமும்,

பா.ஜ.க.வினர் வேண்டுமானால் கையெழுத்திட்டு கொள்ளலாம், தமிழ் பற்றுக்கொண்ட யாரும் கையெழுத்திட மாட்டார்கள், மும்மொழி விவகாரத்தில் தமிழக முதல்வருக்கு ஆதரவு பெருகி வருகிறது,

பா.ஜ.க. இன்றைக்கும் நோட்டாவுடன் போட்டி போடும் கட்சி தான், பிற கட்சிகளோடு சேர்ந்து ஓட்டு வாங்கி உள்ளார்களே தவிர அவர்களுக்கான தனியான வாக்குகள் ஏதும் இங்கு இல்லை.

தமிழ் மண்ணில் பா.ஜ.க. கால் ஊன்ற முடியாது, பா.ஜ.க.வினர் வேறு கட்சிகளோடு கூட்டணி வைக்கும் போது ஆங்காங்கே சில இடங்களில் வாக்குகளை பெற முடிகிறது. மத்திய அரசின் கையில் அமலாக்கத்துறை உள்ளது. யார் வேண்டுமானாலும் ஏவி விடலாம், எங்கு வேண்டுமானாலும் சோதனை நடத்தலாம், சோதனைகளில் தவறான எதுவும் கண்டுபிடிக்கப்பட்டதாக எங்களுக்கு தெரியவில்லை.

ஈடி நிறைய சோதனை செய்திருக்கிறார்கள் ஆனால் அவர்கள் வழக்கு தொடர்ந்திருப்பது மிக மிக குறைவு. அச்சுறுத்தல் காரணமாகத்தான் இ.டி. சோதனை நடத்துகிறார்கள், அதற்கு நாங்கள் அஞ்சமாட்டோம், சொத்துக்களை முடக்கினால் நீதிமன்றம் மூலமாக அதை மீட்போம். முடக்குவதற்கு அவர்களுக்கு அதிகாரம் இருக்கிறது

மீட்பதற்கு எங்களுக்கு அதிகாரம் உள்ளது. தவெகவை நாங்கள் ஒரு பொருட்டாகவே பார்க்கவில்லை, நீங்கள் தான் அதை ஒரு பொருட்டாக பேசிக் கொண்டு உள்ளீர்கள், நாங்கள் அரசியல் கட்சிகளைப் பற்றி தான் பேச விரும்புகிறோம். சிறுபான்மையினரை யாரும் ஏமாற்ற முடியாது அவர்களுக்கு யார் நண்பர் யார் நீலிக் கண்ணீர் வடிகிறார்கள், முதலைக்கண்ணீர் வடிக்கிறார்கள் என்பது சிறுபான்மை யின மக்களுக்கு தெரியும், திராவிட முன்னேற்றக் கழகத்தை தவிர எந்த கட்சியையும் அவர்கள் நம்ப தயாராக இல்லை.

முன்னாள் அமைச்சர்கள் ஏழு, எட்டு பேர் மீது நீதிமன்றத்தில் வழக்குகள் உள்ளன, அவர்கள் வாய்தா வாங்கிட்டு போவதற்கு நாங்கள் பொறுப்பல்ல, நாங்கள் சொன்ன வழக்குகளில் அவர்கள் மீதெல்லாம் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சட்ட மசோதாவிற்கு ஆளுநர் ஒப்புதல் அளித்திருந்தால் வரவேற்கின்றோம், ஒப்புதல் அளிக்காவிட்டால் வைத் துள்ளார் என்று நினைப்போம், இதில் புதுமை ஒன்றும் கிடையாது என்றார்.

கரூர் மாவட்ட கலெக்டர் அலுவலக வளாகத்தில் மின்சாரம் மதுவிலக்கு ஆயத்தீர்வைதுறை அமைச்சர் வி.செந்தில் பாலாஜி, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் நடைபெற்ற உலக மாற்றுத்திறனாளிகள் தின விழாவில், பயனாளிகளுக்கு இணைப்புச் சக்கரம் பொருத்திய பெட்ரோல் ஸ்கூட்டர்களை வழங்கினார். கலெக்டர் மீ. தங்கவேல், எம்எல்ஏக்கள் இரா.மணிக்கம், ஆர்.இளங்கோ, க.சிவகாமசுந்தரி, மேயர் கவிதா கணேசன் ஆகியோர் உள்ளனர்.

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டத்தில்

முதலமைச்சர் பிறந்தநாள் விழா பொதுக்கூட்டங்கள்!

அமைச்சர் அர.சக்கரபாணி சிறப்புரை தே.மதியழகன் எம்.எல்.ஏ. தலைமை!

கிருஷ்ணகிரி, மார்ச் 10 -

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்கள் பிறந்த நாளான மார்ச் ஒன்றாம் தேதி கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனையில் பிறந்த குழந்தைகளுக்கு அமைச்சர் அர.சக்கரபாணி, மாவட்டச் செயலாளர் மதியழகன் எம்.எல்.ஏ. குழந்தைகளுக்கு தங்க மோதிரம் அணிவித்து நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள்.

கிருஷ்ணகிரி புதிய பேருந்து நிலையம் அருகே உள்ள அண்ணா சிலை எதிரே கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட, நகர திமுக சார்பில் தமிழக முதல்வர் தளபதியார் அவர்களது 72 வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளரும், பர்கூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான தே.மதியழகன் தலைமை தாங்கினார் கிருஷ்ணகிரி நகர கிழக்கு மேற்கு பொறுப்பாளர்கள் அஸ்லாம், வேல்மணி ஆகியோர் வரவேற்புரை ஆற்றினர் .

மாவட்ட அவைத் தலைவர் நாகராஜ், மாவட்ட துணை செயலாளர்கள் கோவிந்தசாமி , சாவித்திரி கடலரசு மூர்த்தி, சந்திரன், பொருளாளர் கதிரவன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் செந்தில், கிருபாகரன், பொதுக்குழு உறுப்பினர்கள் பாலன், நாகராசன், சித்ரா சந்திரசேகர், கோதண்டன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தமிழ்நாடு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சரும், கிருஷ்ணகிரி மாவட்டப் பொறுப்பு அமைச்சருமான அர.சக்கரபாணி கலந்து கொண்டு 2772 பயனாளிகளுக்கு தையல் இயந்திரம், குக்கர், குடம், ஆட்டோ ஓட்டுநர்களுக்கு சீருடை, மாற்றுத்திறனாளிகளுக்கு மூன்று சக்கர ஸ்கூட்டர் உள்ளிட்ட நலத்திட்டங்களை வழங்கினார்கள்.

இந்த நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர் சக்கரபாணி முன்னாள் முதல்வர் கலைஞர் அவர்கள் மறைவுக்குப் பின் கட்சியின் தலைவராக பொறுப்பேற்றுக் கொண்ட முதல்வர் தளபதியார் அவர்கள் தொடர்ச்சியாக நடைபெற்ற அனைத்து தேர்தல்களிலும் வெற்றி பெற்றுள்ளார். 2026 சட்டமன்ற தேர்தலில் தி.மு.க. வெற்றி பெற்று இரண்டாவது முறையாக தளபதியார் அவர்கள் முதல்வராக பொறுப்பேற்க வேண்டும் ஏழாவது முறையாக திமுக ஆட்சியில் அமர வேண்டும் என அனைவரும் உறுதி ஏற்க வேண்டும் என்றார். மேலும் மும்மொழி கொள்கையை ஏற்க வேண்டும் என்பதற்காக 2142 கோடி ரூபாயை வழங்காமல் ஒன்றிய அரசு வஞ்சிக்கிறது. இந்தியை வேண்டாம் என்று கூறவில்லை திணிக்க வேண்டாம் என்று தான் கூறுகிறோம், விருப்பப்படுபவர்கள் படித்துக் கொள்ளட்டும். மும்மொழி கொள்கையும், புதிய கல்விக் கொள்கையும் தமிழகம் ஏற்காததால் மத்திய அரசு கல்விக்கு தர வேண்டிய 2142 கோடி ரூபாய் வழங்காததால் 40 லட்சம் மாணவர்கள் பாதிக்கப்படுவார்கள் ஆசிரியர்களுக்கு ஊதியம் வழங்க முடியாத சூழல் நிலவுகிறது. இந்தியாவில் அதிக நிதி செலுத்தக்கூடிய மாநிலம் தமிழகம். ஆனால் குறைவாக நிதி செலுத்தக் கூடிய குஜராத், உத்தர பிரதேசம் போன்ற மாநிலங்களுக்கு அதிக நிதி பகிர்வை ஒன்றிய அரசு வழங்குகிறது. கல்விக்கான நிதி, மாநில நிதி பகிர்வு, தொகுதி மறு சீரமைப்பு என அனைத்திலும் ஒன்றிய அரசு வஞ்சிக்கிறது. அதனால் தான் முதல்வர் தமிழ்நாடு போராடும் தமிழ்நாடு வெல்லும் என்ற உறுதிமொழியை ஏற்க வேண்டும் என அறிவுறுத்தி உள்ளார் என பேசினார். இந்த விழாவில்

மாநில அமைப்பு சாரா ஓட்டுனர் அணி செயலாளர் டி.செங்குட்டுவன், மாநில விவசாய அணி துணை செயலாளர் வெங்கடேசன், மாநில வர்த்தக அணி துணை செயலாளர் கே.வி. எஸ் சீனிவாசன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் நரசிம்மன், கிருஷ்ணமூர்த்தி, ஒன்றிய செயலாளர்கள் கோவிந்தன், தனசேகரன், தேங்காய் சுப்பிரமணி, மகேந்திரன், சாந்தமூர்த்தி, அறிஞர், ராஜேந்திரன், குண.வசந்தரசு, எக்கூர்.செல்வம், ரஜினி செல்வம் ,குமரேசன் , பேரூர் கழக செயலாளர்கள் தம்பிதுரை, வெங்கடப்பன், பேரூர் கழக பொறுப்பாளர்கள் பார்த்திபன், சாஜித், மற்றும் அன்பரசன்,

உள்ளிட்ட அணிகளின் அமைப்பாளர்கள் , தலைவர்கள்,துணைத்தலைவர்கள் துணை அமைப்பாளர்கள், முன்னாள் இந்நாள் உள்ளாட்சி பிரதி 0.நிதிகள் கழகத் தோழர்கள், பெண்கள், பொது மக்கள் ஏராளமனோர் கலந்து கொண்டனர்.

திருவாரூரில் மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு

ரூ102.392 கோடி வங்கிக்கடன்!

பூண்டி கே.கலைவாணன் பயனாளிகளுக்கு வழங்கினார்!

திருவாரூர், மார்ச் 10 - முதலமைச்சர் திராவிட நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னையில் மகளிர் தினத்தை முன்னிட்டு பெண்களை போற்றும் வகையில் மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு நேரடி வங்கிக்கடன் வழங்கி துவக்கி வைத்த நிகழ்வினை தொடர்ந்து . திருவாரூர் மாவட்டம், காட்டூர் கலைஞர் கோட்டம் அஞ்சுகம் அம்மையார் திருமண மண்டபத்தில் நடைபெற்ற மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு கடனுதவி வழங்கும் விழாவில் 1235 மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு ரூ.102.3924 கோடி வங்கிக் கடனுதவிகளை சட்டமன்ற உறுப்பினர் பூண்டி.கே.கலைவாணன்வழங்கினார். மாவட்ட ஆட்சித்தலைவர் மோனச்சந்திரன் மற்றும் அரசு அதிகாரிகள் முன்னிலை ஏற்றனர்.

கோவை தெற்கு மாவட்டம் இளைஞரணி சார்பில் கிணத்துக்கடவில் நடைபெற்ற கண்டன பொதுக்கூட்டத்தில் கழக மாநில மாணவர் அணி தலைவர் வழக்கறிஞர் ராஜீவ்காந்தி கழக இளம் பேச்சாளர் சுகன் மந்த்ரன் கோவை தெற்கு மாவட்ட கழக செயலாளர் தளபதி முருகேசன் ஆகியோர் கண்டன எழுச்சியுரையாற்றினர். சபரி, கார்த்திகேயன், புவனேஷ், சந்திரசேகரன், சல்மான், நாசர், கார்த்திகேயன், எஸ்.ஏ..காதர் சபரி பாலு குணசேகரன் மயூராசுப்பிரமணியம் ஏர்போர்ட்ராஜேந்தர் குறிச்சி பிரபாகரன் நடராஜ் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. குறிச்சியில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் மகேந்திரன் , தினகரன் , ரத்தினசாமி பொதுக்குழு உறுப்பினர்கள் நாகராஜசோழன் ரகுதுரைராஜ் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

மகளிர் தினத்தை முன்னிட்டு காணொளி வாயிலாக தமிழ்நாடு முதலமைச்சர் திராவிட நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கிய விழாவையடுத்து, ஊரக சுய உதவிக்குழு வங்கி கடன் 11736 உறுப்பினர்கள் உள்ளடங்கிய 978 குழுக்களுக்கு ரூ.82.18 கோடி மதிப்பீட்டிலும், பெருங்கடன் 744 உறுப்பினர்கள் உள்ளடங்கிய 8 குழுக்களுக்கு ரூ.5.57 கோடி மதிப்பீட்டிலும், நகர்புறம் சுய உதவிக்குழு வங்கி கடன் 2288 உறுப்பினர்கள் உள்ளடங்கிய 176 குழுக்களுக்கு ரூ.14.00 கோடி மதிப்பீட்டிலும், வாழ்ந்து காட்டுவோம் திட்டம் இணை மானியமாக 6 உறுப்பினர்கள் உள்ளடங்கிய 6 குழுக்களுக்கு ரூ.0.1580 கோடி மதிப்பீட்டிலும், வாழ்ந்து காட்டுவோம் திட்டத்திடன் கீழ் 90 உறுப்பினர்கள் உள்ளடங்கிய 67 குழுக்களுக்கு ரூ.0.480 கோடி மதிப்பீட்டிலும் என,14864 உறுப்பினர்கள் உள்ளடங்கிய 1235 குழுக்களுக்கு ரூ.102.3924 கோடி மதிப்பீட்டில் கடன் காசோலைகளை மாவட்ட செயலாளர் பூண்டி.கே. கலைவாணன் எம்.எல்.ஏ. வழங்கினார்.

அதனை தொடர்ந்து திருவாரூர் நகராட்சி வளாகத்தில் உலக மகளிர் தினத்தை முன்னிட்டு பெண் நகர மன்ற உறுப்பினர்கள் நகராட்சி ஊழியர்கள் தூய்மை பணியாளர்களுக்கு போட்டிகள் நடத்தப்பட்டு வெற்றிபெற்றவர்களுக்கும்,சிறப்பாக பணியாற்றிவர்களையும் பாராட்டி பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. பரிசுகள் வழங்கினார்.

கிருஷ்ணகிரி புதிய பேருந்து நிலையம் அருகே உள்ள அண்ணா சிலை எதிரே கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட, நகர தி.மு.க. சார்பில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களது 72 வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு கிருஷ்ணகிரியில் நலத்திட்ட உதவிகளை உணவு மற்றும் உணவு பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி வழங்கி சிறப்புரை ஆற்றினார் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளரும் சட்டமன்ற உறுப்பினர் தே. மதியழகன் தலைமையில் நடைபெற்றது.

பெரம்பலூர் மாவட்டத்தில்

பொது மக்களுக்கு நீர் மோர் பந்தல் திறப்பீர்!

மாவட்டக் கழகப் பொறுப்பாளர் வீ. ஜெகதீசன் வேண்டுகோள்!

பெரம்பலூர், மார்ச் 10 -

கழகத் தலைவர், முதலமைச்சர் மு .க. ஸ்டாலின் அவர்களின் அறிவுரைக்கு ஏற்ப, பெரம்பலூர் மாவட்டம் முழுவதும் நீர்,மோர் பந்தல் அமைத்து பொது மக்களுக்கு உதவிட பெரம்பலூர் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் வேண்டுகோள் விடுத்துள்ளார். தமிழ்நாட்டில் கோடை காலம் தொடங்கி வெயில் தாக்கம் அதிகரித்து வருகிறது. வரும் நாட்களில் இன்னும் அதிகமாக வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கொளுத்தும் கோடை வெயிலில் பொதுமக்களுக்கு உதவிடும் வகையில் ஆங்காங்கே நீர், மோர் பந்தல்கள் அமைத்திட கழகத்

தலைவர், முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தியுள்ளார். கழகத் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலுக்கு இணங்க, கழக துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா வழி காட்டுதல் படி, போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் ஆலோசனைக்கினங்க,

பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள நகராட்சி, பேரூராட்சிகள், வார்டுகள்,

ஊராட்சி ஒன்றியங்களில் மக்கள் அதிகம் கூடும் இடங்கள், பேருந்து நிறுத்தங்களில் நீர்,மோர் பந்தல் அமைத்து பொது மக்களின் தாகத்தை தீர்ப்பதற்கு ஏற்பாடு செய்திட வேண்டும்.

இது தொடர்பான பணிகளை சம்பந்தப்பட்ட நகர,ஒன்றிய பேரூர், கிளை மற்றும் வார்டு கழகச் செயலாளர்கள், கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் மற்றும் கழக முன்னணியினர் இணைந்து செய்திட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு பெரம்பலூர் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் தனது அறிக்கையில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

முதல்வர் தளபதியார் அவர்களின் வழிகாட்டுதலின்படி நீலகிரி மாவட்டம், உதகை பழங்குடியினர் பண்பாட்டு மையத்தில் நடைபெற்ற உலக மகளிர் தின விழா நிகழ்ச்சியில், அரசு தலைமை கொறடா கா.ராமசந்திரன் கலந்து கொண்டு 163 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.19.08 கோடி மதிப்பிட்டில் வங்கி கடன் உதவிகளை வழங்கினார். உடன் உதகை சட்டமன்ற உறுப்பினர் ஆர்.கணேஷ், மாவட்ட வருவாய் அலுவலர் நாராயணன், மகளிர் திட்ட இயக்குநர் காசிநாதன், உதகை நகர்மன்றத் தலைவர் திருமதி.வாணீஷ்வரி , கழக நிர்வாகிகள் குன்னூர் ஒன்றிய செயலாளர் பிரேம்குமார் தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள் காளிதாசன், மோகன் குமார் உட்பட பலர் உள்ளனர்.

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில், விழுப்புரம் மத்திய மாவட்ட கழக பொறுப்பாளரும், விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினருமான டாக்டர் இரா.இலட்சுமணன் மகளிர் தினத்தில் நகராட்சி தூய்மை பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் நகர்மன்ற தலைவர் தமிழ்ச்செல்வி பிரபு, நகராட்சி ஆணையர் வசந்தி, சுகாதார அலுவலர் ஸ்ரீபிரியா, நகர்மன்ற உறுப்பினர் கோமதி பாஸ்கர் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் இருந்தனர்.